வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 223 of 2023

வழக்கு சாட்சி – PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கொம்பையா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பேச்சிமுத்து | தொழில் | : | கட்டிட மேஸ்திரி |
| கிராமம் | : | ஸ்ரீனிவாச நகர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18.01.2024.

(2, 3 எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 1 ஆம் எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 18.01.2024.

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு கொசவம்பாளையம் ரோட்டில் உள்ள முத்துக்குமாரசாமிக்கு சொந்தமான கட்டிடத்தில் நானும், அ.சா.1.விஜயகுமாரும் மேஸ்திரியாக வேலை செய்து வந்தோம். கடந்த 06.08.2023 ஆம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்று விடுமுறை, நானும், அ.சா.1.விஜயகுமாரும் குடோனில் இருந்தோம். 15 பீகார் மாநிலத்தை சேர்ந்த நபர்கள் லேபர் ஒப்பந்தம் மூலம் குடோனில் வேலை செய்து வந்தார்கள். சுஜீத்குமார், பூஜன்குமார், ராஜேந்தர் ஆகியோர் மார்கெட்டிக்கு காய்கறி வாங்கிவிட்டு வருவதாக சொல்லி சொன்றார்கள். மாலை 5.30 மணியளவில் கொசவம்பாளையம் ரோட்டில் பல்சர் இரு சக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் அவர்களிடம் பணத்தை கேட்டதாகவும், அவர்கள் கொடுக்காததால் பூஜன்குமார் என்பவரின் மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.3000/– பணத்தை பறித்துக்கொண்டதாக என்னிடம் சொன்னார்.

2. நானும், அ.சா.1.விஜயகுமாருக்கு தகவல் சொன்னேன். இதை நாங்கள் வேலை செய்யும் கட்டிட ஓனருக்கு தகவல் தெரிவித்தோம். அவர் புகார் கொடுக்க சொன்னார். நாங்கள் மறுநாள் 07.08.2023 ஆம் தேதி சுஜீத்குமார், பூஜன்குமார், ராஜேந்தர் ஆகியமூவரையும் அழைத்து சென்று நானும், அ.சா.1ம் காவல் நிலையம் சென்றோம். அவர்கள் ஹிந்தியில் சொன்னதை தமிழிலில் மொழிபெயர்த்து அ.சா.1 விஜயகுமாரிடம்

சொன்னேன். அ.சா.1 விஜயகுமார் அதை புகாராக எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தார். போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள். புகார் கொடுத்த மறுநாள் இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**</u>

3. எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.01.18 17:23:49 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 223 of 2023

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.விஜயகுமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ரவி | தொழில் | : | கட்டிட மேஸ்திரி |
| கிராமம் | : | அங்காளம்மன் நகர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18.01.2024.

(2, 3 எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 1 ஆம் எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 18.01.2024.

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு கொசவம்பாளையம் ரோட்டில் கட்டிட மேஸ்திரியாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் 15 பீகார் மாநிலத்தை சேர்ந்த நபர்கள் லேபர் ஒப்பந்தம் மூலம் வேலை செய்து வருகிறார்கள். முத்துகுமாரசாமிக்கு சொந்தமான குடோனில் அங்கே தங்கிக்கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறார்கள். கடந்த 06.08.2023 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை என்பதால் பூஜன்குமார், சுஜீத்குமார், ராஜேந்தர் ஆகிய மூவரும் காய்கறி பொருட்கள் வாங்குவதற்காக மார்க்கெட்க்கு செல்வதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றார்கள். சிறிது நேரம் கழித்து மாலை 5.15 மணியளவில் மூவரும் குடோனிற்கு வந்து என்னிடம் கொசவம்பாளையம் ரோட்டில் மாலை 5.30 மணியளவில் கடைக்கு சென்றுகொண்டிருந்தபோது 20 லிருந்து 30 வயது மதிக்கதக்க மூன்று நபர்கள் பல்சர் இரு சக்கர வாகனத்தில் வந்து பூஜன்குமாரிடம் சண்டையின் மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.3000/–த்தை மிரட்டி பறித்துச்சென்றதாக என்னிடம் கூறினார்கள்.

2. நாங்கள் வேலை செய்யும் ஓனரிடம் மேற்படி சம்பவம் பற்றி தெரிவித்தேன். அவர்களுக்கு தமிழ் தெரியாது என்பதால் நான் அவர்களை காவல் நிலையம் அழைத்து சென்று என்னுடன் வந்த கொம்பையா என்பவருக்கு ஹிந்தி தெரியும், அவரிடம் ஹிந்தியில் சொல்ல சொல்ல அவர் தமிழிலில் என்னிடம் சொன்னார். அதை நான்

புகாராக எழுதி கையொப்பம் செய்து காவல் நிலையத்தில் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் வழக்கு பதிவு செய்து மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

3. எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA
Date: 2024.01.18 17:23:55 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.